


அமரர்

# திரு அப்பாகுட்டி செல்வரத்தினம்

அவர்களின் சிவப்பேறு குறித்த

# நினைவு மலர்

10.06.2018

உ
சிவமயம்



அமரர்

## திரு.அப்பாக்குட்டி செல்வரத்தினம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

10.06.2018

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

# சமர்ப்பணம்

*வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி*
*வகுத்து வானுயர, எம் வாழ்வு வளமுற*
*ஓய்வுறக்கம் துறந்து உற்றவழி பணிபுரிந்து*
*மீளாத் துயில் கொண்ட எங்கள் தெய்வத்தின்*
*பாத மலர்களுக்கு நித்திய ஒளி எனும் இம்மலரை*
*சமர்ப்பணம் செய்கின்றோம்.*

**குடும்பத்தினர்.**

உ
சிவமயம்



பிறப்பு
06
.
12
.
1928

இறப்பு
11
.
05
.
2018

அமரர்

# அப்பாக்குட்டி செல்வரத்தினம்

அவர்களின்

## *திதி நிர்ணய வெண்பா*

நலமான விளம்பி சித்திரை மாதம் மதிதேயும்
பலமான ஏகாதசியாம் திதியில் - உலகாளும்
இறைவன்தாள் பற்றினார் இனிய செல்வரத்தினப் பெரியார்
நிறை வாழ்வின் பற்றெல்லாம் நீக்கி

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

திருச்சிற்றம்பலம்

## *தேவாரம்*

கூற்றாயினவாறு விலக்ககலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவேன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

## *திருவாசகம்*

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பக்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் எனக் கருலியவாறார் பெறுவார் அச்சோவே.

## *திருவிசைப்பா*

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானாந்தக் கனியை
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

## *திருப்பல்லாண்டு*

மண்ணுக தில்லை வளர்க தம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்ன நடை மடவார் உமைகோன்
அடியோனுக்கு அருள் புரிந்த
பிள்ளைப் பிறவியறுத்தே நெறி தந்த பித்தற்கும்
பல்லாண்டு கூறுதுமே.

## *திருப்புராணம்*

மண்ணில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய்வித்தல்
கண்ணினால் அவர்நல்விழாப் பொழிவு கண்டு ஆத்தல்
உண்மையாமெனில் உலகர் முன்வருமெனஉரைப்பார்.

## திருப்புகழ்

ஏறமயில் ஏறிவிளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறுமடியார்கள் வினைதீர்த்த முகமொன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகமொன்றே
மாடுபடு சூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணரவந்த முகமொன்றே
ஆறுமுகமானபொருள் நீயநால வேண்டும்
ஆதியநணசலம் அமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## தேற்றம்

மன்னவர் போல் வாழ்வாரும்
மலை போல் பணம் குவிப்பாரும்
பொன் பாத்திரத் துண்பாரும்
பூப் பரவித் துயில் கொள்வாரும்
இன்னுயிர் விடுத் தோர் நாள்
எயனிடத்தே போவ துண்மை
ஏன்றெண்ணி வாழ் துன்பம்
என்றுமே இருக்காது உனக்கு.

முளையிலும் கருகும் மூன்றிலையிலும் கருகும்
இளம் பருவத்திலும் எட்டா உயரத்திலும்
விழுந் தழியும் மரம்போல மனிதர் உயிர்
இழப்பதுண்மை அழுகைவிடுத் தாறி யிருப்பாய்.

# வாழ்க்கை வரலாறு

சீர்மேவு திருநாவற்குழி எம்மூரில் ஏர்மேவு குலம்தோன்றி இனிது வாழ்ந்த நேர்மைமிகு பெரியார் அப்பாக்குட்டி தேர்ந்தெடுத்து திருமணம் செய்துகொண்ட கார்தோறகும் கூந்தலுடை செல்லம்மாவை கருணையுடை கந்தன் அண்ணன் தன்னின் அருளதனால் ஈன்றெடுத்தார் ஆண்கள் மூவர் முதற்பிள்ளை இராசரத்தினத்தின் பின்னே உதவுகரம் நீட்டி வந்தார் குமாரசிங்கம் கடைசி வந்த செல்வரத்தினத்தம்பி கல்வியிலே வல்லவனாய் வளர்ந்து ஊரார் எல்லோருமே போற்றும் தன் இன்குரலால் அக்காலத்திரையுலகப் பாடல்பாடி திக்கெல்லாம் தன் பெயரை உச்சரிக்க பாடல்கள் பாடி விளையாடும் காலம் நாடகங்கள் நாவற்குழி வாலிபர்கள் ஒன்றே கூடி நின்று குதுகலித்து நடாத்தக் கண்டு திரை பின்னே நின்று தன தேன்குரலால் தம்பி செல்வரத்தினம் பாடுவாரே ஊசி ஒன்று வீழ்ந்தாலும் காதில் கேட்கும் நாசி வழி மூச்சுவிடும் ஓசை கேட்கும் அமைதியது கொட்ட கையில் அங்கே தோன்றும் இமைகூட மூடார்கள் வந்தோர் தானும் காலமது கடகடடெனக் கரைந்து போக வாலிபனாய் வளர்ந்து சுய தொழிலே தேடும் எண்ணத்திலே கார் ஒன்று வாங்கி கொண்டு வந்து ஊரார் அழைக்கும் போது உதவி மிகத்தந்து ஏற்றிச் சென்று இதமாகப் பேசி இன்பங்கண்டார். எங்கேனும் இன் இசைக்கச்சேரி என்றால் அங்கெல்லாம் இருப்பார் செல்வரத்தினத்தார். மேளதாளம் நாதஸ்வரம் போன்றதெல்லாம் நாளாந்தம் நடந்தாலும் அங்கே செல்வார் வடக்கில் வாழ்ந்த வித்துவான்களோடு படகும் துடுப்புக் கோலும் போல உடலும் எங்கள் உயிரும் போல கடலும் வீசும் அலையும் போல உறவு கொண்டு வாழ்ந்ததை ஊர்அறியும் மணப் பருவம் தம்பிக்கெண்ணி அண்ணன்மார் மணமகளாய் குணக்குன்றாம் இராசேஸ்வரியை ஆண்டது அறுபத்தேழில்

அலங்காரப் பந்தலிலே நீண்டாண்டு வாழ வாழ்த்தி மணம் செய்விதார் இல்லறத்திலிருவரும் சேர்ந்தினிமை காண சாந்தினி, சுகந்தினி பாலமுரளி பின் றோகினி, யாழினி பிள்ளை நல்லார்கள் கல்வியில்தேறி உயர்ந்திட ஊரே வாழ்த்திட நல்மருமக்கள் நவகுமார், ஸ்ரீபாஸ்கரன், அனுஷா, சத்தியேந்திரா அமைந்திட அம்மா, அப்பா நித்தமும் மகிழ்ச்சி வெள்ளம் நீந்திய காலம் பேரர்கள் பதின்மர் பகலவன் ஆயினர். சீராய் வாழ்க்கை சென்ற இந் நாட்களில் காரின் பாட்டன் செல்வரத்தின உத்தமர் ஊரினில் மட்டுமா உலாவினார்? எங்கிலும் சென்று வந்ததால் "கார்மணியம்" பேர் காற்றிலும் தவழ்ந்தது வயதும் வளர்ந்திட உடலும் தளர்ந்திட பதினொன்றைந்து பதினெட் ஆண்டினில் கதிரவன் உறங்கி கடலினில் மறைய சித்தி விநாயகர் திருத்தாள் வணங்கி நித்திரை போனார் நிரந்தரமாய் அவர்.



## ஔவையார் அருளிச் செய்த

# விநாயகர் அகவல்



சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் மங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்

பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயி லொருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாபி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
யமுத நிலையு மாதித்த னியக்கமுங்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக் கரத்தி னீரெட்டு நிலையு
முடற்சக் கரத்தி னுறுப்பையுங் காட்டிச்
சண்முகதூலமுஞ் சதுர்முக சூர்க்மமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப்படுத்திக்

கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக்கருளி
யென்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக்களைந்து
வாக்கும் மனமு மில்லா மனோலயந்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரு மானந்தத் தழுத்தியென் செவியி
லெல்லை யில்லா வானந் தம்மளித்
தல்லல் களைந்தே யருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தித்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
யணுவிற் கணுவா யப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்தித்
கூடும் மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
யஞ்சக் கரத்தி னரும்பொருடென்னை
நெஞ்சக் கருத்தி னிலேயேறி வித்துகத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

முற்றிற்று



உ
சிவமயம்



## திருவாசகச் சிறப்பு வெண்பா

தொல்லை யிலும்பிறவி சூழுந்தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே -எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந் தேன்.

## சிவபுராணம்

நமச்சி வாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமனிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிாற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விரும மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்றஇத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தோனூறு நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட முடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெருமானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்மை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



உ
முருகன்துணை

# கந்த சஷ்டி கவசம்



### காப்பு
### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமல ரருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

### நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செய்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை

கீதம் பாட கிண்கிணி யாட
மைய நடஞ்செய்யும் மயில் வாகனனார்
கையில்வே ல்எனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற

மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலங்குகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ சணமும் பதக்கமுந் தரித்து
நண்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடையழகும் இணைமுழந்தாளும்

திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல்முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க

சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைகக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருடன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தனடயறத்தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலஸ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக்கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனை வரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்

தண்டியக் காரரும் சண்டா ளங்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொங்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலொரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டதுவோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி

பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமார
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப்பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க

வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக் குறமகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவநீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திடவருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்க தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவார்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறித்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துணை வாக

சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயினட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணம் சண்முகா சரணம்



# சகல கலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ
சக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்தாக
வுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அழிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்

தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.
தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப்பி தந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்கா
யுளங் கொண்டுதொண்டர்

தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதானமுங்
கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதன் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்யார்
நிலந் தோய்ப்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்வாய்
படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.



# சிந்தனைத்துளிகள்

- வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவதற்கு முதலில் தன்னம்பிக்கை வேண்டும்.

- அளவுக்கதிகமாய் தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்.

- ஓய்வை விவேகத்துடன் பயன்படுத்துவதே கல்வியின் குறிக்கோள்.

- மனிதனை உருவாக்குவதில் துன்பமும் இன்பமும் சரிசமமான இடத்தைப் பெறுகின்றன.

- பேச்சிலும் நடத்தையிலும் திமிர்த்தனத்தைக் காட்டாமல் பண்பையும், பணிவையும் காட்டுங்கள்.

- புத்தகங்கள் எம்முடன் பேசும் மௌன நண்பர்கள்.

- வாழவைப்பவன் இறைவன், வாழத்தெரிந்தவன் மனிதன், விழவைப்பவன் துரோகி, தூக்கிவிடுபவன் நண்பன்.

- பெருமைக்காரன் கடவுளை இழப்பான், கோபக்காரன் தன்னையே இழப்பான், பொறாமைக்காரன் நண்பனை இழப்பான்.

- பிரார்த்தனை செய்யும் உதடுகளை விட உதவி செய்யும் கரங்கள் உயர்ந்தவை.

- ஒரு நூல் முழுவதையும் படிப்பதை விட ஒரு பக்கத்தை நன்றாகப்படித்து உணர்ந்து கொள்வது மேலானது.

- உன் நம்பிக்கையைப் பணத்தின் மீது வையாதே பணத்தை நம்பிக்கையான இடத்தில் வைத்துவிடு.

- முட்டாளை சமாளிக்க இலகுவான வழி மௌனமாக இருப்பதே.

- பணம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது பணம் இல்லாவிட்டால் எவருக்குமே உன்னைத் தெரியாது.

- அதிகமாகப் புத்தகங்களைப் படி அதற்கு அதிகமாகச் சிந்தனை செய்.

- உண்மைக்காக ஒவ்வொரு பொருளையும் இழக்கலாம் ஆனால் எதற்காகவும் உண்மையை இழக்கலாகாது.

- நாணயமாக நடப்பவர்கள் ஒளிக்கும் அஞ்சுவதில்லை இருளுக்கும் அஞ்சுவதில்லை.

- கெட்டவழியில் இலாபத்தை எதிர்பார்ப்பதே நஷ்டத்தின் தொடக்கம்

- ஆண்டவன் ஒருவனைக்கைவிடத் தீர்மானித்தால் சுண்டெலி கூட அவனைக்கடித்துக் கொன்றுவிடும்.

- பழக்கங்கள் முதலில் சிலந்தி வலையாகப் பின்னப்பட்டு இறுதியில் விலங்குச் சங்கிலிகளாக இறுகுகின்றன.

- அன்பான வார்த்தை பேச செலவே இல்லை.

- உன் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் உன் சரித்திரத்தில் ஓர் ஏடாகும்.

# பெற்றோருக்கு சில அறிவுரைகள்

- குழந்தைகள் கள்ளம் கபடமற்றவர்கள் அவர்களுக்கு அன்பை பொழியுங்கள்.

- பிள்ளைகளின் மனம் நோகும்படி நடந்து கொள்ளாதீர்கள்.

- பிள்ளைகள் முன் இரகசியம் பேசாதீர்கள்.

- மற்றவர் முன் ஏசவோ அடிக்கவோ வேண்டாம். உங்கள் பிள்ளைகளின் வெள்ளை உள்ளத்தில் கரிபூசாதீர்கள். அது காலத்திலும் அழியாத கருமேகம்.

- நீங்கள் பெற்ற எல்லாப் பிள்ளைகள் மீதும் அன்பைப் பொழியுங்கள். இல்லையேல் அவர்களின் பிஞ்சு மனதில் அது விஷமத்தனமாகப் பதிந்துவிடும்.

- கல்வியில் விளையாட்டில் முன்னேற இடம் கொடுங்கள். வழி காட்டுங்கள். பிள்ளையின் விருப்பு வெறுப்புக்கு இடமளியுங்கள். அப்போது தான் பெற்றோரின் தூய்மையான பாசத்தை பிள்ளைகள் ஏற்றுக்கொள்வார்.

- பரீட்சையில் சித்தியடையவில்லை என்பதற்காக கண்டபடி ஏசவோ, அடிக்கவோ, அவமானப்படுத்தவோ வேண்டாம்.

  சரி இந்தமுறை இல்லாவிட்டால் அடுத்தமுறை பரீட்சையில் என்பிள்ளை முதலாவதாக வரும் என்று பிஞ்சு மனதைத் தேற்றுங்கள். கல்வியில் முன்னேற அவர்களுக்குபிடித்த பொருட்களை வாங்கித்தருவேன் என்று கூறி படிப்பில் ஊக்கமளியுங்கள்.

- உங்கள் பிள்ளை ஏதாவது தவறு செய்தால் திட்டிக் கொட்டாதீர்கள். தவறைச்சுட்டிக் காட்டி அமைதியாக அன்பாக எடுத்துச் சொல்லுங்கள்.

- நல்லது கெட்டது எது என்பதை சிறு உதாரணங்களுடன் எடுத்துச் சொல்லுங்கள்.

- முதலில் உங்கள் பிள்ளையை சந்தேகக் கண் கொண்டு பார்ப்பதைத் தவிர்க்கவும். நீங்கள் தொட்டதற்கெல்லாம் சந்தேகப்பட்டால் அன்புச் செல்வங்களின் வாழ்வே சூனியமாகிவிடும்.

- எடுத்ததெற்கெல்லாம் குறை கூறி பிஞ்சுமனதில் வேதனையைப் பெருக்காதீர்கள்.

- உங்கள் அன்புச் செல்வங்களை வார்த்தையால் துளைக்காதீர்கள். ஏனென்றால் அடித்த அடி அழிந்தாலும் சொன்ன சொல் மனதை விட்டு என்றும் அழியாது.



# பல்சுவை அம்சங்கள்

- பூமிக்கும் சந்திரனுக்கும் இடையே உள்ள தூரம் ஏறக்குறைய 3இலட்சத்து 84ஆயிரம் கிலோமீற்றர்.

- பூமியில் 60கிலோ எடை உள்ள மனிதன் சந்திரனில் 10கிலோதான் இருப்பான். ஏனெனில் பூமியைவிட சந்திரனின் ஈர்ப்புவிசை ஆறில் ஒரு பங்குதான்.

- பூமியிலிருந்து நாம் நிலவின் ஒரு பகுதியை மட்டுமே காண்கின்றோம். சந்திரனின் தற்சுழற்சிக்கு ஆகும் நேரமும் அது பூமியை ஒரு முறை வலம் வருவதற்கு ஆகும் நேரமும் சமமாக இருப்பதால் நம்மால் சந்திரனின் மறு பக்கத்தைக் காணமுடிவதில்லை.

- நிலவில் தூசு போன்றவை இல்லாததால் அங்கு கால் பதித்து ஆர்ம்ஸ்ராங். அல்ட்ரின் ஆகியோர் அங்கு விட்டுச் சென்ற காலடித் தடங்கள் மறைய பல கோடி ஆண்டுகள் பிடிக்கும்.



# வாழ்க்கை

✡ வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் ; அதை நழுவவிடாதீர்கள்.

✡ வாழ்க்கை ஒரு பயணம் ; அதை சென்று முடியுங்கள்.

✡ வாழ்க்கை ஒரு விடுகதை ; அதை விடுவியுங்கள்.

✡ வாழ்க்கை ஒரு விளையாட்டு ; அதில் ஈடுபடுங்கள்.

✡ வாழ்க்கை ஒரு போராட்டம் ; அதை வென்று காட்டுங்கள்.

✡ வாழ்க்கை ஒரு வெகுமதி ; அதை ஏற்றுக் கொள்ளுங்கள்.

✡ வாழ்க்கை ஒரு போட்டி ; அதில் வெற்றி பெறுங்கள்.

✡ வாழ்க்கை ஒரு கலை ; அதை அழகுபடுத்துங்கள்.

✡ வாழ்க்கை ஒரு வேதனை ; அதை தாங்கிக் கொள்ளுங்கள்.

✡ வாழ்க்கை ஒரு சவால் ; அதை எதிர் நோக்குங்கள்.

✡ வாழ்க்கை ஒரு சோகம் ; அதற்கு மனம் தளராதீர்கள்.

✡ வாழ்க்கை ஒரு பிரச்சினை ; அதற்குத் தீர்வு காணுங்கள்.

# விழாக்களை அறிந்து கொள்வோம்.

| வருட நிறைவு | ஆங்கிலப்பெயர் | தமிழ்ப்பெயர் |
|---|---|---|
| 01 | PAPER | காகிதவிழா |
| 02 | COTTON | பருத்திவிழா |
| 03 | LEATHER | தோல்விழா |
| 04 | SILK | பூபழவிழா |
| 05 | WOOD | மரவிழா |
| 06 | IRON | சர்க்கரை, கல்கண்டு அல்லது இரும்பு விழா |
| 07 | COPPER | கம்பளி அல்லது செம்பு விழா |
| 08 | ELECTRICAL | வெண்கல விழா |
| 09 | POTTERY | மண்கலசவிழா |
| 10 | TIN | தகரம் அல்லது அலுமீனியவிழா |
| 11 | STEEL | எஃகுவிழா |
| 12 | LINEN | லினன்விழா |
| 13 | LACE | பின்னல் விழா |
| 14 | IVORY | தந்தவிழா |
| 15 | CRYSTAL | படிகவிழா |
| 20 | CHINA | பீங்கான் விழா |
| 25 | SILVER | வெள்ளிவிழா |
| 30 | PEARL | முத்துவிழா |
| 40 | RUBY | மாணிக்கவிழா |
| 45 | SAPPHIRE | (நீலக்கல்) இரத்தினவிழா |
| 50 | GOLD | பொன்விழா |
| 55 | EMERALD | மரகதவிழா |
| 60 | DIAMOND | வைரவிழா |
| 75 | PLATINUM | பவளவிழா |
| 100 | CENTURY | நூற்றாண்டு விழா |

குடும்பத்துடன்






நோயுற்றகாலத்தின் போது மனைவி மற்றும் பேரப்பிள்ளைகளுடன்









குலதெய்வ வழிபாட்டின்போது





திருமணத்தின் போது



உற்ற நண்பர் தவில் மாமேதை N.R.S உடன்



# கண்ணீர் அஞ்சலி

நாவற்குழியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## அப்பாக்குட்டி செல்வரத்தினம்

மலர்வு
06 . 12 . 1928



உதிர்வு
11 . 05 . 2018

*கண்கள் பல உன்னைத் தேட*
*காணாமல் காலனுடன் சென்றதேனோ*
*கள்ளமில்லா வெள்ளை மனமும்*
*புன்னகை பூத்த பொன்முகமும்*
*மறைந்ததேனோ*
*கண்களெல்லாம் கண்ணீர் பொங்க*
*கலங்கவிட்டு எங்கு சென்றீர்*
*அமைதியாய் மரணத்திரையில்*
*மௌனமாய் மறைந்ததேனோ*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவுத்துயரில்
நாவற்குழி சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபையினர்

# விழிநீர் சொரிகின்றோம்

மலர்வு

06.12.1928



உதிர்வு

11.05.2018

அன்பு முகமும் அறிவான பேச்சும்
மங்காத தெளிவுடன் மனங்குளிர வைக்கும்
சிங்கார நடையும் சீரான பார்வையும்
பொங்கு நிறைகளுடன் பூமியிலே வாழ்ந்தீர்கள்
பொங்கிய வாழ்வைப் பொறாத காலனவன்
கணக்கை முடித்து விட்டான்
காசினியில் கலங்குகின்றோம் மாந்தர்நாம்
கலங்குகின்றோம்
காண்பதெப்போ தங்களை கலங்குகிறது நெஞ்சம்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நாவற்குழியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## அப்பாக்குட்டி செல்வரத்தினம்

பிரிவால் துயருறும்

நாவற்குழி சித்திவிநாயகர் இளைஞர் சமூக அபிவிருத்திச் சபை - இலங்கை

நாவற்குழி இளைஞர் சமூக அபிவிருத்திச் சபை - பிரித்தானியா

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
06 . 12 . 1928

உதிர்வு
11 . 05 . 2018



நாவற்குழியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## அப்பாக்குட்டி செல்வரத்தினம்

எல்லோருக்கும் நல்லவராய்
உயர்வான பண்பாளராய் பிறந்து
இன்முகத்தோடும் புன்சிரிப்போடும்
அன்புடனும் பண்புடனும்
பணிவுடனும் வாழ்ந்து
மக்களை நல்லவராய் வாழ
அறிவுரைகள் பல கூறி
வழிகாட்டி வையத்துள் வாழ்ந்து
தெய்வமாகிவிட்ட செல்வரத்தினம் அவர்களே!

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

பிரிவால் துயருறும்
நாவற்குழி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம்

அச்சமைப்பு : மதி கலர்ஸ் நல்லூர் 021 2229285

# விழிநீர் அஞ்சலி

நாவற்குழியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# அப்பாக்குட்டி செல்வரத்தினம்



மண்ணில்
06.12.1928

விண்ணில்
11.05.2018

நேற்றுவரை எம்முடன்
வாழ்ந்தவரே...!
நீங்கா நினைவுகள் தந்து
நீண்ட துயில் கொண்டதேனோ!
கண்ணிமைக்கும் நொடியிலே
காலன் உம்மை கவர்ந்து விட்டான்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத் துயரில்
சித்தி விநாயகர் சனசமூக நிலையம்,
நாவற்குழி






# Kokuvil Station C.C.T.M School

# இதயம் கனிந்த
# நன்றிகள்



"எந்நன்றி கொண்டார்க்கு உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொண்ட மகற்கு"

எங்கள் அன்புத் தெய்வம்

## அமரர் திரு.அப்பாக்குட்டி செல்வரத்தினம்


அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து பல வழிகளிலும் உதவியவர்களுக்கும், அவரின் இறுதி நிகழ்வுகளில் பங்கு பற்றியவர்களுக்கும், இறுதி நிகழ்வின் போது மலர்வளையங்கள் சாத்தி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், எங்கள் இழப்பின் துயரை நேரிலும் தொலைபேசி மற்றும் இணைய வழிகள் ஊடாகவும் ஆற்றுப்படுத்திய எங்கள் உறவினர்கள், உற்றவர்கள், அயலவர்கள், நண்பர்கள் ஆகியோருக்கும் நினைவு மலரில் எங்கள் தந்தையின் நினைவைப் பதிவு செய்தவர்கள், ஆத்ம ஈடேற்ற பூசை வழிபாடுகளைச் செய்து உதவிய சிவாச்சாரியப் பெருமக்கள் இம்மலரை அச்சிட்டு உதவிய அச்சகத்தார் உள்ளிட்ட அனைவருக்கும் எங்கள் உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி.

சித்திவிநாயகர் வீதி,
நாவற்குழி மேற்கு,
கைதடி.

குடும்பத்தினர்.

# வம்சாவழி




❖ அமரர்கள்.


கீதாசாரம்
"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்,
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்".
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.
- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -